|| ஸ்ரீ: ||

# அமூர்த்தபகவத்யஜநம்

# अमूर्तभगवद्यजनम्

அக்நி உபாஸநத்தின் பெருமையும் அவசியமும் மேலும்
பொதுவான தர்மங்களும் எனது அநுபவங்களும்

श्रीविखनस महागुरवे नमः


ஆசிரியர்:

உ. கி. வரதராஜ யஜ்வா


★


கிடைக்குமிடம்:

உ. கி. வரதராஜ யஜ்வா
ஸந்நதித்தெரு, உப்பிலியப்பன்கோவில்.
திருநாகேஸ்வரம் போஸ்ட் (தஞ்சாவூர் ஜில்லா)

# இத்தர்ம கைங்கர்யத்திற்கு உதவியவர்கள் விபரம்

ஸ்ரீ உ. வெ திரு தார்மிகர்கள்

| | | |
|---|---|---|
| வக்கீல் ரங்கஸ்வாமி அய்யங்கார் கணபதி நகர் தஞ்சாவூர். | 50 | 00 |
| ஸ்ரீ ராமதேசிகாச்சாரியாரின் அத்யந்த சிஷ்யர் வக்கீல் (சிதம்பரம்) | 25 | 00 |
| ஸ்ரீ தேவனூர் விளாகம் அழகிய சிங்கர் 3 குடும்பங்களும் ... | 75 | 00 |
| உப்பிலியப்பன் ஸன்னதி D. N. ஸன் ஸ்ரீநிவாஸகோபாலன் ஜவுளி வியாபாரம் ... | 25 | 00 |
| வடக்குவீதி ஸ்ரீ பிச்சு அய்யர் ... | 10 | 00 |
| ஷி ஊர் பொன்னுசாமி முதலியார் பிரபல ஜவுளி வியாபாரம் ... | 10 | 00 |
| விவேகானந்தா ரைஸ் மில் முதலாளி ... | 5 | 00 |
| சேஷாத்ரி அய்யங்கார், பம்பாய் ... | 20 | 00 |
| ஸ்டேட் பாங்க் ராகவன் ... | 5 | 00 |
| ஸ்ரீ கல்யாணராம அய்யர், ஐ. ஆர். ரூம், ஜங்ஷன் விருத்தாசலம் ... | 10 | 00 |
| *X*-ரே. நாராயணஸ்வாமி அய்யர், குடந்தை... | 5 | 00 |
| புஸ்தகம் அச்சாவதற்கான பிரசுரக் கூலி ரூ ... | 941 | 50 |

வசூலான தொகை ரூ. 240. ஆஸ்திகர்கள் தாராளமாக நன்கொடை உதவி அடியேனுக்கு ஜாஸ்தியான சிரமம் ஏற்படாமல் இருக்கும்படி பிரார்த்திக்கிறேன். மிக்க நன்றி.

சுபம்

உ. கி. வ. யஜ்வா

॥ श्रीः ॥

# அமூர்த்தபகவத்யஜநம்

# अमूर्तभगवद्यजनम्

அக்நி உபாஸநத்தின் பெருமையும் அவசியமும் மேலும் பொதுவான தர்மங்களும் எனது அநுபவங்களும்

श्रीविखनस महागुरवे नमः


ஆசிரியர்:

உ. கி. வரதராஜ யஜ்வா


★


கிடைக்குமிடம்:

உ. கி. வரதராஜ யஜ்வா

ஸந்நதித்தெரு, உப்பிலியப்பன்கோவில்.

திருநாகேஸ்வரம் போஸ்ட் (தஞ்சாவூர் ஜில்லா)

# श्रुतिः

अग्ने सहस्राक्ष शतमूर्धन् शतं ते प्राणाः सहस्रमपानाः ।
त्वँ साहस्रस्य राय ईशिषे तस्मै ते विधेम वाजाय स्वाहा ।
अग्नये नमः सकृत्ते नमः........अपरिमित कृत्वस्ते नमः ॥

गुरुः प्लावयिता तस्य ज्ञानं प्लवमिहोच्यते ।

प्रसुग्मन्ता धियसानस्य सक्षिणि येरेभिर्वराँ अभिषु प्रसीदत ।
अस्माकमिन्द्रमुभयं जुजोषति यत्सौम्यस्यान्यसो विबोधति ॥

ஹே அக்நே!

அநேக ஆயிரம் சிரஸ்ஸுகளும் அப்படியே நேத்ரங்களும் எங்கும் காதுகளும் அநேகவிதமான நிதிகளுக்கு தலைவராகவும் பிரகாசிக்கின்ற தங்களை நாங்கள் இந்த ஹவிஸ்ஸால் வழிபடுகின்றோம். ஒருதரம் அல்ல இரண்டு தடவை அல்ல கணக்கில் அடங்காத அளவு ப்ரக்ஞாமங்கள் தங்களுக்கே.

ஸம்ஸாரமாகிற கடலில் தவிக்கும் சிஷ்யர்களுக்கு குருவானவர் ஓடக்காரர் போலவும் அவருடைய ஞானத்தை ஓடமாகவும் தான்.......

## வரப்ரேஷணை மந்த்ரம்

சாமான்யமான பூர்த்த தர்மங்களை செய்து அதன் பலனைக எந்த லோகம்சென்றாலும் கூடனுளி என்ற பெயர் மாறவேமாறாது. விவாஹத்தில் வரன் (மாப்பிள்ளை) தேடுவதற்கு நான்கு பிராம்மணர்களை அனுப்ப மந்த்ரம் நீங்கள் ஒரே சமயத்தில் நல்ல மார்க்கத்தில் சென்று கன்னிகையின் தகப்பனாரைக் குறித்துச் செல்லுங்கள் இவர்களை சேர்த்துவைக்கிற விஷயத்தில் தேவேந்திரனும் விரும்புகிறான். ஏன்? இத்தம்பதிகளாலே செய்யப் போகிற யாகத்தில் ஸோமபானம் பண்ணலாம் என்ற ஆர்வத்தினால். உலகிலும் சில அசடுகள் கடனை கொடுத்துவிட்டு தேச காலம் தெரியாமல் கண்டவிடத்தில் எல்லாம் கேட்பதுபோல் அல்லாமல் ஸ்தானத்திற்கு தகுந்தபடி எவ்வளவு பெருநோக்கும் கண்யமாகவும்......... இவனை ச்ரௌத கர்மாக்களை பண்ண அதிகாரியாக ஆக்கி..............

|| श्रीः ||

|| श्रीविखनस महा गुरवे नमः ||

# || अमूर्त भगवद्यजनम् ||

---

(श्रुतिः) (१) आमे गृहा भवन्त्वा प्रजा म आमा यज्ञो विशत् वीर्यावान् ........मा भूमा मा प्रहासीत् ||

(२) आमे ग्रहो भवत्वा........मा भूमा प्रहासीत् ||

(३) अमाऽग्निष्टोमोविशत्तू........मा भूमा मा प्रहासीत् ||

எனக்கு நல்ல வீடுகள் உண்டாகுக. மற்றும், நல்ல பிரஜைகளும் யக்ஞத்துக்கு உரிய தீர்த்தமாகிற தேவதையும், ஐந்திரவாயவம் முதலான ஸோமரச கிரக பாத்ரங்களும், கிரகிப்ப தற்குமுன் படிக்கவேண்டிய மந்திர பாகங்களும், ஸ்தோத்ர சஸ்த் ரங்களும் ஆதித்யர் முதலான, தேவர்களும் சபையில் உள்ள அந்தணர்களும், அக்நிஷ்டோமமும் இரண்டாம் பகுதியாகிய உக்தியமும், அதிராத்ரமும் எமக்கு உண்டாகுக.

மற்றும் ஆயிரக்கணக்கான பெருகிய செல்வம் ஒருபோதும் என்னைவிட்டு நீங்காததாகுக.

*ஸம்ஹிதை காண்டம் 7–பி 3–அ 13*

*உ. கி. வ. யஜ்வா*

சுபம்

---

## தர்மத் துணுக்குகள்

अग्निर्देवो द्विजातीनां என்னும் உண்மை வாக்கும் வெள்ளிடை மலையாம். துவிஜர்களான நமக்கு முதல் குலதெய்வம் அக்நியேதான். பிற்பட்டுத்தான் ஸமூர்த்தமான தேவாலயங்கள். நம்முடைய குல தெய்வத்தை உற்று நோக்காமல் இருந்ததுதான் சீர்கேட்டிற்குக்

॥ श्रीः ॥

## முயற்சி என்ருல் ஸ்வதர்மத்திற்கே

अमृतं चैव मृत्युश्च द्वयं देहे प्रतिष्ठितम्

நமக்கு இந்த சரீரமே மோட்ச நரகங்களுக்கு மார்க்கமாக அமைக்கப்பட்டு இருக்கிறது. (பாகவதமும்) குடும்பத்தில் மிகுந்த ஆஸக்தி உள்ளவனைப்போல் நடி என்கிறதே ஒழிய சேற்றில் அகப்பட்ட கிழட்டு யானைபோல் ஆசாபாசங்களில் விழாதே என்பது பாசம் என்பது மிருத்யுவின் வாயில். स्वलाभ संतुष्टान् என்பது அர்த்தகாமங்களில் முயற்சி இல்லாமல் கிடைத்ததைக்கொண்டு சந்தோஷி. விசேஷித்து இந்த உத்தம மான ஜன்மாவைக்கொண்டு விஹித கர்மாக்களை செய்ய நல்ல வாய்ப்பு கிடைத்ததே என்ற சந்தோஷமும் இதைவிட மஹோ பகாரம் யாரால் செய்ய முடியும் என்று ஸ்ரீமந் நாராயணனை ஸ்மரிப்பதும். நமக்கு முன் ஜன்மவினையின்படிதான் சுகதுக் கங்களும், அது வித்வான் என்றோ மூடன் என்றோ பலவானோ துர்பலனோ சூரனோ பயந்தவனோ என்று பார்க்காது,

बुद्धिमन्तं च शूरन्च मूढं भीरुं जडं कविम् ।
दुर्बलं बलवन्तन्च भागिनं भजते सुखम् ॥

அடையத்தக்க பாக்யமுள்ளவனை சுகமானது வந்து அடையவே செய்கிறது. ஆக சாமான்ய தர்மம்பற்றி திரவியம் தேடுவதும் சரியல்ல. அது சேற்றை பூசி அலம்ப முயற்சிப்பது போல்தான்.

धर्मार्थं यस्य वित्तेहा वरं तस्य निरीहता ।
प्रक्षाळनाद्धि पङ्कस्य श्रेयो न स्पर्शनं नृणाम् ॥

---

காரணம். இதுபற்றி வியாஸரும் தனக்கு ஏற்பட்ட ஆபத்தை விலக்கி கொள்ளவும் மங்களத்தை அடையவும் வர்ணங்களுக்கு தகுந்தபடி क्षत्रियो बाहुवीर्येण तरेत् आपदमात्मनः......होमैश्च वै द्विजः ஹோமங்களா லேயும் ஜபங்களாலேயும்தான். என்று வேதங்களின் முடிகள் போன்ற உபநிஷத்துக்களும் அக்நியை பரமான்மாவாகவே கூறியுள்ளது.

அதற்குத் தொடாமல் இருப்பதே ச்ரேயஸ். விஹித கர்மாவின் மேன்மைபற்றி, மிக்க தநிகர் தன்னுடைய சகல சொத்தையும் உத்தமதேசம் உத்தமகாலம், உத்தம பாத்ரத்தில் சந்தோஷம் நிரம்பின மனத்தோடு கொடுப்பதும், மற்றொரு ஏழை தன்னுடைய ஸ்வதர்மமாகிற அக்நிஹோத்ராதி கர்மாக்களையும் வேதத்தை திரும்பத் திரும்பச் சொல்லியே

रताः स्वाध्याय करणे वयं नित्यं हि भूमिप ॥

என்று மகரிஷிகள் சொன்னதுபோல சரீரத்தை ஜரையை அடையச் செய்வதும், மேற்சொன்ன தநிகர் எந்த எந்த லோகங்களை அடைகிறரோ இந்த அத்யாயியானவன் அதுகளையும் மேலும்

यावन्तँ हवा इमां वित्तस्य........अपपुनर्मृत्युञ्जयति ब्रह्मणस्सायुज्यं गच्छति ॥

என்று அருணம். பிர. 2 பஞ்சாதி 18. நாமும் அவ்வளவு மேன்மையான ஸ்வதர்மத்திற்கே முழு மூச்சாக பாடு படுவோமாக.

अप्रयत्नागतास्सेव्याः गृहस्थैः विषयाः सदा ।
प्रयत्नेन उपगम्यश्च स्वधर्म इति मे मतिः ॥

பாரதம் சாந்திபர்வா.

உ. கி. வ. யஜ்வா

சுபம்.

---

अग्निमीळे पुरोहितं என்று ருக்வேதமும் ஆக்நேயசூக்தத்தையே தொடக்கமாக கொண்டு எழுந்துள்ளது. யஜுர் வேதமோ யாண்டும் மூன்று அக்நிகளையே (த்ரேதாக்நி உபாஸநம்) முதற்காரணமாக கொண்டுள்ளது என்பது மறுக்கமுடியாத விஷயம். துதியையே மேற்கொண்ட சாமவேதமும் अग्न आयाहि वीतये என்று அக்நிதேவனை துதித்துக்கொண்டே எழுந்தது.

ब्रह्मार्पणम् ब्रह्महविः ब्रह्माग्नौ ब्रह्मणा हुतं ब्रह्मैव तेन गन्तव्यं ब्रह्मकर्म समाधिना என்று யக்யத்தில் சம்பந்தப்பட்ட யாவும் (வேள்விகிரியை) ஸகலமும் பிரும்மம் என்றும், ஹவிஸ் பிரம்மம் அக்நி பிரும்மம் பிரும்ம கர்மத்தில் ஈடுபட்டவரும் அடையவேண்டியது பிரும்மமே என்று கண்ணன் திருவாய் மலர்ந்து அருளியிருப்பது தெரிந்த

|| श्रीः ||

உத்தமமான பிராம்மண ஜன்மா எடுத்த யாவரும் பகவானை ஆராதிப்பது அவசியம். அதில் அக்நி மூலமாயும், பிம்பத்திலும், சூரிய மண்டலத்திலும், பூமியிலும், தீர்த்தத்திலும், தனது ஆத்மாவிலேயும், என பல பிரிவுகள் உள. என்றாலும் அக்நி உபாஸனத்திற்குத்தான் முக்யத்வம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. (அதாவது அமூர்த்தம்) என்று பெயர் ஏனென்றால், இப்புவியில் உள்ள ஜங்கமஸ்தாவர ரூபமான அனைத்தும் அக்நி ஹோத்ரத்திற்காகவும் (க்ரது) யக்ஞத்திற்காகவுமே படைக்கப் பட்டு இருக்கிறது, தர்சபூர்ணமாசமோ பசுபந்தமோ ஸோம யாகங்களோ இவைகளும் இவைகளை அறியவேண்டி திதிநக்ஷத்ர யோககரணங்களுக்காக ஜ்யோதிஷமும் कालस्य वेदनार्थं तु ज्योतिशं पुरनाघ। உயிரெழுத்து மெய்யெழுத்து பதம் அர்த்தம் இவை களுக்கு ஏற்பட்ட ஸந்தி லக்ஷணத்திற்காகவும் நாமங்கள் தாதுக்கள் இதுகள் பகுத்தறிய முன்பு வியாகரணமும்

वर्णाक्षर पदार्थानां सन्धिलिङ्गं प्रकीर्तितम् ।
नामधातु विवेकार्थं पुरा व्याकरणम् स्मृतम् ॥

சந்தஸ்நிருக்தம் எல்லாம் அக்நி ஹோத்ரத்திற்காகவே படைக்கப் பட்டது என்பதை எந்த துவிஜர்கள் தெரிந்துகொள்ளவில்லையோ அவர்கள் தமஸ்ஸால் சூழப்பட்டு ரௌரவத்தையும் பிற்பட்டு புழுக்களாகவும் ஜனிக்கின்றனர்.

உ. கி. வ. யஜ்வா

சுபம்.

---

விஷயம். இந்த நாளில் பெரும்பாலும் கீதை தெரியாதவர்களே கிடையாது எனலாம். அப்படி இருக்க அக்நி ஹோத்ராதி கிரதுக்கள் வேண்டாமென்று சொல்வது பாபமல்லவா. தடுப்பதோ மஹாபாதகச் செயல். செயலில் ஈடுபட சௌகரியங்கள் இல்லாமல் இருப்பது ஸஹஜம். தர்மங்களைத் தெரிந்துகொண்டவர்களுக்கு பலனை வேதமே यो वै यज्ञस्य प्रायणं प्रतिष्ठां, उदयनं வேள்வியின் தொடக்கம் நடு முடிவு என்பதை உணர்கிறவன் அதன் யாக பலனையும் அடைகிறான் என்பது. அக்நியை ஆராதிப்பவனுக்கு குன்மரோகத் திலிருந்து விடுதலை என்றும். இதர மதங்களில் தன்னுடைய

|| श्रीः ||

पुलाका इव धान्येषु पुत्तिका इव पक्षिषु ।
तद्विधास्ते मनुष्येषु येषां धर्मो न कारणम् ॥

எவர்களுக்கு தர்மம் க்ஷேமத்திற்கு காரணம் என்று தோன்றவில்லையோ அவர்கள் தான்யங்களுள் பதர் போலவும் பறவைகளுள் கொசு போலவும் மனுஷ்யர்களில் இருக்கிறார்கள்.

ஸ்ரிய: பதியான ஸர்வேச்வரனுடைய அனுக்ரஹத்தாலும் மஹான்களுடைய உதவியாலும் விளம்பி வருஷம் வைகாசி மாதம் 22...........26 தேதிகளில் அக்னிஷ்டோமமும் பிற்பட்டு ஆக்ரயணேஷ்டி சாதுர்மாஸ்ய நிரூடபசுபந்தமும் தற்பொழுது சாதாரண வைகாசி 27-28ல் ஸௌத்ராமணி என்ற மஹாயாகமும் நடந்ததின் ஞாபகார்த்தமாயும் நம்மவர்களில் பெரும்பாலும் ச்ரௌத தர்மம்பற்றி தெரியாத காரணத்தாலோ அல்லது வெகு நாளாக மறைந்ததின் விளைவாகவோ நமக்கு இதுகள் வேண்டாம் என்று சிலரும் மேலும் சிலர் அனுஷ்டேயம்தான் ஆனால் ப்ரத்யக்ஷ பசுவில் தோஷம் எனவும் இப்படி பலவாறாக நேரிலும் மறைமுகமாகவும் சொல்லி வருகிறபடியால் அடியேனுக்கு தெரிந்தவரை சமாதானம் எழுதவேண்டி வந்தது இதில் உள்ள குற்றங்களை மன்னித்து ஆசார்யாளுடைய கிருபைக்கு பாத்ரர்களாக ஆகி ஸகல மங்களங்களையும் அடையும்படி ப்ரார்த்திக்கும்,

உ. கி. வரதராஜயஜ்வா **13-10-70**

சுபம்.

---

குருவினிடத்தில் பாபங்களை வெளியிடுவதே பரிஹாரமாக இருப்பது கண்கூடு. அக்னி உபாஸநத்தை விட்டவன் ப்ராயச்சித்தி ஆவான் என்றும் அவனுடைய அன்னத்தை மிக பெரியோர்கள் அருந்துவதுகூட இல்லை. அவனுடைய வாக்கு மாதர்களுடைய வாக்கு போலவும் சதுர்த்தனுடைய வாக்குபோலவும் பழிப்பு உடையவனாகவும், வீரனைக் கொன்றவனாகவும் ஆகிறான். கா-1 பி-5 அனு-2. இந்த பூமியின் கண் பாரத தேசத்தில் பிறப்பு ஏற்பட்டதே நமக்கு பெரிய அதிர்ஷ்டம். इमां सुनाव मारुहं शतारित्रां शतस्प्यां-अच्छिद्रां पारयिष्णुम् காண்டம் 1. பிர-5 அனுவாக கடைசியில் பூமியாகிய நல்ல ஓடத்தின்மீது ஏறியிருக்கும்

॥ श्रीः ॥

॥ श्री विखनसमहागुरवे नमः ॥

मङ्गळाचार युक्तानां नित्यं च प्रयतात्मनाम् ।
जपतां जुह्वतां चैव विनिपातो न विद्यते ॥

சுபமான ஆசாரத்தோடு கூடினவர்களும் நியமங்களோடும் ஜபசீலரும் ஹோமங்கள் செய்பவருமாய் இருப்பவர்களுக்கு ஆபத்துக்கள் நேரிடுவது இல்லை ॥

வைகாநஸ குலத்தில் உதித்த குழந்தைகளுக்கு.

भूतानां प्राणिनः श्रेष्ठाः प्राणिनां बुद्धिजीविनः ।
बुद्धिमत्सु नराः श्रेष्ठाः नराणाञ्च द्विजातयः ॥

பூதங்களில் மூச்சு விடுபவை சிறந்தவை. அதிலும் புத்தியால் ஜீவிப்பது அதிலும் மனுஷ்ய ஜன்மமும் அதிலும் பிராம்மண ஜன்மமும் இப்படி பலப் படிகளாக பேசி அதிலும் கர்மடர்கள் சிறந்தவர்கள் என்றும் கர்மாக்கள் அவசியம் பற்றி இதிஹாஸ புராணங்களிலிருந்து நமக்கு தெரிய வருகிறது. அவ்வித கர்மாக்களில் यज्ञो हि श्रेष्ठतमं कर्म என்று வேதமும் மேலும் देवो वः सविता प्रार्पयतु श्रेष्ठतमाय कर्मणे பசுக்களே உங்களை எல்லாவற்றையும் செலுத்துகின்ற ஈச்வரன் மிகச் சிறப்புற்ற வேள்விகிரியைக்கு (பால் தயிரின் பொருட்டு) புல் அருந்த வெளியில் செலுத்தி அருள் வானக என்று யசுர்வேத முதல் அனுவாகத்திலேயே யாகத்தின் பெருமையும் இந்த யக்ஞங்களை காட்டிலும் மேம்பட்டது மூன்று உலகிலும் இல்லை என்று மஹரிஷிகள் சொல்லிக் கேட்டது ப்ரத்யக்ஷம்.

---

தன்மையை அடைந்தவராக இருக்கின்றோம், நூற்றுக்கணக்கான துடுப்புகளை உடையதும் அடியில் நீர் போகும் வழியற்றதும் (சித்ரமில்லாதது) பாரயிஷ்ணும் என்பதால், வேண்டிய பயனை அடையக் கரை காட்டுவதும், அதாவது பகவந்முகோல்லாஸமாகவே ஸகல கர்மங்களையும் செய்து நமது குறிக்கோளை அடைய (அவன் திருவடிகளைத் தவிர ஏது குறிக்கோள்) எப்பொழுதும் என்னுடைய ஆஸ்ஹிகங்கள் பிறருக்குத் தெரியாமல் இருக்கவேண்டும் என்றே நினைக்கவேண்டும்.

धर्म श्रुतो वा दृष्टो वा कथितो वा कृतोपि वा ।
अनुमोदितो वा राजेन्द्र पुनातीह नरं सदा ॥

தர்மமானது 5 பேர்களை பரிசுத்தப்படுத்துகிறது. ஒருவன் தர்மத்தை நன்கு அனுஷ்டித்தால் அதை கேட்டாலும் 1. பார்த்தாலும் 2. அதைப்பற்றி பெருமையாகப் பேசினாலும் 3 அல்லது அந்த தர்மத்தை தானே செய்தாலும் 4. நாம்தான் செய்ய முடியவில்லை இவர்களாவது செய்கிறார்களே நல்லகாரியம் என்று அனுமோதனம் செய்தாலும் 5. இப்படியாக தர்மத்தின் மேன்மை.

यज्ञं ये विश्वतो धारं सुविद्वां सो वितेनिरे ।

என்று ஸகலத்திற்கும் ஆதாரம் யக்ஞமே. இந்த கர்ம பூமியில் அக்னிஹோத்ரம் யாகம் முதலிய ஸத்கர்மா நடக்கவில்லையென்றால் எல்லா உலகங்களும் தடுமாற்றமும் அமங்களங்களும்தான், எல்லா உலகங்களின் நடக்கைகள் யக்ஞத்தைப்பற்றியவைகளே ஆதலின் யக்ஞமானது புவனங்களின் நாபிஸ்தானம் போன்றது.

पृच्छामि त्वा भुवनस्य नाभिं · यज्ञमाहुः भुवनस्य नाभिम् ।

(வாகோ வாக்யம்) 117 வது காண்டம் 4 பிர. 19 அனு. பிராம்மணம் என்றும் வாகோ வாக்யம் என்றும் வேதத்தில் சில பாகம். கேள்வி பதில் எவ்வளவு காலம் வரையில் அக்னிஹோத்ரிகள் இவ்வுலகில் இருக்கிறார்களோ அவ்வளவு காயம் வரைதான் ஆகாயத்தில் சூரியனும் உதிப்பான். (பிரகாசிப்பான்) அதாவது மேற்சொன்ன ஹோமப் புகையானது ஆகாசத்தில் சென்று சூரியனுக்கு வலுவைக் கொடுக்கிறது. யாகங்களுக்கு குறைவு வந்தால் தனது கிரணசமூகங்களால் ஜலத்தை இழுத்து மறுபடி உலகிற்கு உபகாரமாக விடும்படியான சக்தி இல்லாமல் போய் அநேக துவாரங்களும் ஏற்பட்டுவிடும்.

---

தர்மக்கொடி கட்டலாகாது. (அதாவது பிரகாசப்படுத்துதல்) नित्यं अज्ञात पर्यीभे इति मन्येत ब्राह्मणः அக்னியை ஆதானம் செய்தவன் செல்வவானாக விரும்பிலன். சிறந்த பாகதேயத்தையும் விரும்பான். அக்னியினுடையதாகவே ஆக்குகிறான். அதுவே இவனது செல்வம். यद्वा अग्निरहिते नध्यंतेऽयामो भागधेयं निकामयमानः यदाग्र्येयं सर्वं भवति शैवास्यधिः

यावत्कालं हि तिष्ठन्ति लोके चापि अग्निहोत्रिणः ।
तावदेव हि पुण्येन दीप्येते रविणाम्बरे ॥

அக்னியில் விதிப்படி போடப்பட்ட ஆகுதியானது சூரியனை அடைகிறது. அவரிடமிருந்து மழையும் அதினின்று அன்னமும் பிறகு பிரஜைகளும் உண்டாகின்றன.

अग्नौ प्रास्ताहुतिस्सम्यक् आदित्यं उपतिष्ठते ।
आदित्यात् जायते वृष्टिः वृष्टेरन्नं ततः प्रजाः ॥

இந்த சராசராத்மக ரூபமான உலகத்தை அக்னிஹோத்ரி ஒருவனே போஷிக்கிறான் என்றால் தர்மமானது (யாகமானது) எவ்வளவு அத்யாவசியம் என்பது புலனாகின்றது, பாருங்கள்.

दैवे कर्मणि युक्तो हि बिभर्तीदं सराचरं

பிதாமஹரும் தேவதைகளையும் மனுஷ்யர்களையும் பார்த்து

सहयज्ञाः प्रजाः सृष्ट्वा पुरोवाच प्रजापतिः ।........
........परस्परं भावयन्तः श्रेयः परं अवाप्स्यथ ॥

நீங்கள் ஒருவர்க்கொருவர் உபகாரமாக இருந்து உலகிற்கு க்ஷேமத்தை உண்டுபண்ணுங்கள் என்றும் அதாவது கிரதுமூலமாக மனுஷ்யர்கள் மேல் உலகிற்கு வர்ஷிப்பவர்கள் என்றும் தேவதைகள் பூமிக்கு மழை மூலமாயும், ஹோமப்புகையானது மேலே போகும் தன்மை உள்ளது. (மழையானது மேலிருந்து பூமிக்கும்) யயாதி மஹாராஜன் தேவலோகத்திலிருந்து தள்ளப் பட்டு தன்னுடைய தௌஹித்ரர்களுடைய (பெண் வயிற்று பிள்ளைகள்) யாகப்புகையானது பூமியில் இருந்து கங்கா ப்ரவாஹம் போல் மேல் உலகிற்கு ப்ரவஹிக்க அதை முகர்ந்துகொண்டே வந்தான் என்பது.

तेषां अध्वरजं धूमं स्वर्गद्वारमुपस्थितम् ।
ययातिरुपजिघ्रन्वै निपपात महीं प्रति ॥

भूमौ स्वर्गे च सम्बद्धां नदीं धूममयीं नृपः ।
स गङ्गामिव गच्छन्तीं आलम्बय जगतीपतिः ॥

இதிலிருந்து பூதேவர்களான பிராம்மணர்கள் மேல்உலகிற்கு வர்ஷிப்பவர்கள் என்று ஸ்பஷ்டமாகத் தெரிய வருகிறது. ஸம்ஹிதை காண்டம் 1 பிர 6. ஒரு சமயம் கூட்டமாகக்கூடிய தேவதைகளுக்கு ஏதோ குறைவு தோன்றியதால் திக்குகளில் பயிர்கள் வாடின. அதை நீக்குவதற்கு தேவர்கள் மழைக்கு காரணமாக இந்த 5 மஹா மந்திரங்களையும் கண்டுபிடித்தனர். ஆஶ்ராவய என்பதால் காற்று உண்டாயிற்று. அஸ்து ஶ்ரௌஷட் என்பதால் மேகம் கிளம்பியது யஜ என்பதால் மின்னல் உண்டாயிற்று யே யஜாமஹே என்பதால் இடி முழங்கியது வௌஷட் என்பதால் திக்குகளில் குளிராகிய மழை பரவியது. மேற்சொன்ன 5 மந்திரத்தை ஒட்டியே பிரார்த்தனு சுலோகங்களும்

चतुर्भिश्च चतुर्भिश्च द्वाभ्यां पञ्चभिरेव च ।

हूयते च पुनर्द्वाभ्यां सनो विष्णुः प्रसीदतु ॥

எவர்கள் நான்கு எழுத்தாலேயும் மறுபடி 4-யும் பிறகு 2-லேயும் மறுபடி 5ந்தாலேயும் பிறகு 2-லேயும் ஹோமம் செய்யப்படுகின்ருரோ அப்பேர்பட்ட விஷ்ணுவானவர் நமக்கு அனுக்கிரகம் செய்யட்டும். ஆக உலகிற்கு க்ரது (யாகம்) அவசியம் என்று நிஸ்ஸந்தேஹமாக தெளிவாகிறது. பிரும்மஸ்ரீ வடகுடி பெரியவாளும் உபந்யாஸங்களில் யாகமானது உலகிற்கு வேண்டாம் என்று ஒருவன் சொல்வானே ஆகில் அவனைவிட அசடு இருக்க முடியாது என அழுத்தமாக கண்டித்து சொல்ல கேட்டு இருக்கிருேம்.

यजनार्थं द्विजास्सृष्टाः तारका दिविदेवताः

என்று பிராம்மணன் எதற்காக சிருஷ்டிக்கப்பட்டான் என்ருல் யக்ஞம் பண்ணுவதற்காகவே என்பதை ஒருதரம் சொன்னுல் போதாது இங்கு இருந்து ஸத்கர்மாக்களை செய்து தேஹாவஸானத்தில் யார் யார் எந்த உலகிற்கு செல்கிருர்களோ அவர்களை பூஜித்து தங்கள் எல்லை தாண்டிகொண்டு விடத்தான் தேவதைகளும், நாம் தினந்தோறும் ஸ்ரீமத் ராமாயணம் வாசிக்கும்கால்

गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यं लोकाः समस्ताः सुखिनो भवन्तु ॥

என்று எல்லா உலகங்களும் நன்ருக வாழவேணும் என்பதை பின்னிட்டும் பசுவையும் துவிஜர்களையும் முதலில் சொல்வா

---

सप्रैव जायते श्वश्वो भूयान्भवति य एवम् विद्वान् अग्निमुपतिष्ठते ।

प्रश्न ५ अनुवाकम् ९

அக்நியை போற்றுகிறவன் மக்களை உண்டாக்கிகொண்டு, நாளுக்கு நாள் மேன்மேலும் ஸர்வ க்ஷேமத்தோடும் வளர்கின்ருன்.

னேன் என்ருல் இந்த 2 வஸ்துகளாலேதான் க்ஷேமம் ஏற்பட மூலகாரணம். பசுவையும் பிராம்மணனையும் ஒரே குலமாயும் ஆனுல் இரண்டாக பிரிக்கப்பட்டு இருப்பதாகவும்

ब्राह्मणानां गवां चैव कुलमेकं द्विधाकृतम् ।

एकत्र मन्त्रा स्तिष्ठन्ति हविः अन्यत्र तिष्ठति ॥

ஒன்றில் மஹாமந்திரம், மற்ருென்றில் ஹவிஸ். அதாவது ஹோமதிரவியம். இரண்டும் சேர்ந்தால் க்ரதுத்தான் (யாகம்) ஹவிஸ்ஸின் விசேஷத்தைக் கவனிப்போம். பசுவின் பால் ஹோமம், தயிர் ஹோமத்ரவியம், நெய், பிருஷதாஜ்யம், நெய்யும் தயிரும் கலந்தது, ஸாங்நாயிகம் தயிரும் பாலும் சேர்ந்தது. ஆமிஷெ வாஜிநம் ஹோமம், பால் சூடு ஆறுவதற்குமுன் உறை குத்திஞல் சக்கையும் தண்ணீருமாக ஆகும். சக்கைக்கு ஆமிக்ஷெ என்றும் ஜலத்திற்கு வாஜிநம் என்று பெயர். ஆக இன்னும் அநேகவிதமாகவும் உபகரிக்கிறது கோவானது. மேற்சொன்ன 2 வஸ்துவினுடைய பெருமையானது ஒன்றுதான் என்பது பற்றி மஹிரிஷி ஒருவர் சமுத்ர ஜலத்தினுள் தபஸ் செய்ய செம்படவர்கள் வலை வீசவும் அவர் வலையில் சிக்கியதால் உடனே எழுந்து நகரத்து ராஜாவிடம் முறையிட மத்ஸ்ய ஜீவியர்கள் என்னையும் சேர்த்து இழுத்தமையால் அவர்கள் சொத்தாய் நான் போய்விட்டபடியால் தன்னை விடுவித்துக் கொள்ள அவர்களுக்கு ஏதாவது கொடுக்கப்படலாம் எனவும் ராஜாவானவர் தங்களுக்கு தகுந்தது எது என்று கேட்டபோது தன் மதிப்பை தானே சொல்வது இழிவு எனவும் ஆயிரம் பொன் பதில் இல்லை. பதிஞயிரம் லக்ஷம் ஒன்றுக்கும் பதில் சொல் லாதது கண்டு ஒரு கோவை பிரதிநிதியாக கொடுக்கவும் ரிஷியும் சந்தோஷித்து சென்றதாக. எக்ஞத்தின் பெருமையும் பிராம் மணனின் பெருமையும் சொல்ல முடியாததன்ரே. இந்த யக்ஞத்தை கிருஹஸ்தன்தான் செய்ய முடியும். பாக்கியான பிரும்மசாரியோ யதிகளோ செய்யமுடியாது. அவர்களுக்கு பிக்ஷெ (வைச்வதேவம்பண்ணி) அளிப்பது இவன்தானே ! ஆகையால்தான் இந்த கிருஹஸ்தாச்ரமானது தாய் போன்றது என்பார்கள்.

---

பெரும் கர்மத்திற்கு இறைவனுகிய அக்னியே கக்ஷீவான் என்ற மஹரிஷியை கர்மங்களை செய்பவனுக செய்தாய் அதேபோல் என்னையும் ஸோம யாகங்களுக்கு ஆசிரியனுக செய்வாயாக.

सोमानं स्वरणम् कृणुहि ब्रह्मणस्पते । कक्षीवन्तं य औषिजम् ॥

தீக்ஷையின் விசேஷத்தை புகழ்கிறது. (காண்டம்–7, பி–2 ப–39)

यथा नदी नदास्सर्वे सागरे यान्ति संस्थितिम् ।
एवं आश्रमीणस्सर्वे गृहस्थे यान्ति संस्थितिम् ॥

எப்படி நதிகளோ நதங்களோ (மேற்கில் ஓடி சமுத்ரத்தில், கலக்குவது) சமுத்ரத்தில் போய் முடிவு பெறுகின்றதோ அதே போல்தான் எல்லா ஆச்ரமங்களும் கிருஹஸ்தனிடத்தில் நிலை நிறுத்தப்படுகின்றன. சகல ஜீவராசிகள் என்ன மற்றும் சகல தேவதைகளுக்கும்கூட ஹவிர்பாகம் அளிப்பது இவன்தானே. தேவலர் ஸந்யாஸத்தில் நோக்கம் வைத்தது கண்டு ஸகலமான பூதங்களும் பிதிர்க்களும் தேவதைகளும் எவன் இனி நமக்கு ஹவிர்பாகம் கொடுப்பான் என கதறின என்றால் பகவான் சிரிய; பதி சுமையை யாரிடம் வைத்திருக்கிறான் பாருங்கள். सन्यासेकृत बुद्धिं तं, भूतानि पितृभिस्सह, ततो दृष्ट्वा प्ररूरुदुः कोऽस्मान् संविभजिष्यति இவன் தர்மத்தை ரக்ஷிப்பதற்கு, கோசம் போன்றவன். ब्राह्मणस्सर्वभूतानां धर्मकोशस्य गुप्तये தான் மாத்ரம் குழந்தை குட்டிகளோடு வாழப்பிறந்தவன் அல்லன் எல்லா உலகங்களும் நன்றாக க்ஷேமமாக ஸகல ச்ரேயஸ்ஸோடும் இருக்கவேண்டும் என்ற பரந்த நோக்கத்தோடுதான். (ஆசார்யன் தன் சிஷ்யனிடம் மஹாமந்திரத்தை உபதேசித்துவிட்டு இது மிக க்ஷேமகரமானது இதை நீ வணக்கமில்லாதவன் நாஸ்திகன் இவர்களிடம் ஒரு பொழுதும் சொல்லாதே. சொன்னால் அழிவாய் என்றார். சிஷ்யன் ஒரு க்ஷணம் யோஜித்தார். தான் கெட்டாலும் ஸகல ஜனங்களும் க்ஷேமத்தோடு சேரட்டும் என கோபுரத்தின்மீது ஏறி வெளியிட்டாராம். அக்நிஹோத்ர மத்தியில் ஹோமம் உண்டு. அதாவது உலகில் உள்ள ஸகல ஜீவராசிகளின் கர்பமானது க்ஷேமமாகவும் சுகமாகவும் பிரஸவிக்கவேண்டி செய்யப் பட்டு வருகிறது. सौर्यं हविः.........रायस्पोषमिषमस्यासु दीर्घरत् स्वाहा இதற்கு உத்தேசத்யாகம் गर्भेभ्य इदं என்று தன் வயிற்றைத் தொட்டுக்கொண்டு, ஸ்ரீ தசரதன் காலத்தில் அக்நிஹோத்ரம் பண்ணாத வீடே கிடையாது என்றும் சரயூ நதியை வர்ணிக்குமிடத்து सरयू यूपमालिनी என்று அந்த ஸரயூ நதியின் இரு கரைகளிலேயும் கணக்கிட முடியாததான யாகங்கள் நடந்து யூபங்கள் எங்கும் வரிசையாக நதிக்கு மாலைபோலவும் ஆகையால்தான்,

---

द्वादशरात्रीदीक्षित स्यात् ...... एषहत्वै जायते यस्तपसोऽधिजायते ।

யஜமானன் 12 தீக்ஷை செய்துகொள்கிறான். ஆகையால் பிரஜாபதி வடிவனாக ஆகிறான். மற்றும் மாதா பிதாக்களிடமிருந்து பிறந்தது ஸாமான்யம். தீட்சையாகிற தவத்தால் உண்டான பிறப்பே யஜமானனுக்கு முக்யம். துவிஜர்களுடைய சரீரம் அக்நிஹோத்ரம் முதலான

கர்பங்கள் எல்லாம் விச்சேதமே இல்லாதபடிக்கு, இன்னும் புராணங்களை பார்த்தால் அர்த்தராத்ரி, ஸ்திரீ பிரஸவம், தூக்கம் பலம், பிரஸவம் ஆனதுபோல் தோற்றம், விழித்துக்கொண்டாள். ஸ்திரிலிங்கமா புல்லிங்கமா (புருஷ ப்ரஜையா) என்பதை விடிந்து தெரிந்து கொள்ளலாம் என, நித்ரைக்கு முக்யத்வம் கொடுத்ததாக. அபார்ஷன் என்ற சொல்லுக்கே: இடமில்லை. இவ்வளவும் அக்னி ஹோத்ரத்தின் பெருமையும், யாகத்தின் பெருமையினால்தான். ஏன் சமீபத்தில் சுமார் 12 வருஷங்களுக்கு முன், நம் தஞ்சை ஜில்லாவில் உத்தராயணம் பிறந்து 2 மாதங்களுக்குள் 7 ஸோமயாகம் நடந்தது. இதன் பயன் எங்கும் கோடையே தெரியாமலும் வைசூரி முதலிய ஈதிபாதைகள் இல்லாமலும் மாடுகளுக்கு வேண்டிய புல் எங்கும் நன்றாக வளர்ந்தும் வைக்கோலுக்கே அவசியமில்லாமலும்; பால், தயிர், பசுவின் புஷ்டியைப்பற்றி சொல்லவும் வேணுமோ. எங்கும் சௌக்யமே. இவனிடத்தில் கொடுமை கிடையாது. ஸகல ஜீவராசிகளுக்கும் மித்ரன்.

ब्राह्मणो दारुणो नास्ति मैत्रो ब्राह्मण उच्यते

இந்த லோகத்தில் காயக்லேசங்களை செய்து ஜிஹ்வாசாபல்யத்தைவிட்டு (இது இருப்பவன் எந்த கர்மா செய்யவும் லாயக்கில்லாதவன்) சிரமப்பட்டு தபஸ் செய்து பரலோகத்தில் முடிவு இல்லாத சௌக்கியத்தை அடையவேத்தான் இவன் சரீரம்.

ब्राह्मणस्यतु देहोयं न कामार्थाय जायते ।

इहक्लेशाय तपसे प्रेत्यतु अनुपमं सुखम्

முன் சொல்லியபடி यजनार्थं द्विजाः सृष्टाः என்பதுபோல் கோக்களும் गावौयज्ञार्थमुत्पन्नाः दक्षिणार्थं तथैव च। யக்ஞத்தை உத்தேசித்தும் தக்ஷிணைக்காகவேயும்தான் பசுக்கள் சிருஷ்டிக்கப்பட்டன, (ஸம்ஹிதை காண்டம் 7. பிர. 4. அனு 17)

ஒத்த அளவுள்ள உடம்புகளை உடையதும், வேறுபட்ட நிறங்களையுடையதும் ஒரே சாதியோடு கூடினவைகளும் ஆஹவநீய முதலிய இஷ்டி நிமித்தமாக, விசுவாயு, விச்வவ்யசா, விச்வகர்மா, இடா, அதிதா என்னும் நாமங்களை உடையதுமான கோக்களை அங்கிரஸ் மஹரிஷிகள் தங்கள் தவ வலிமையால் பூமிக்கு கொண்டு வந்தார்கள்.

---

கர்மாக்களுக்கே ஏற்பட்டது அப்படி அல்லாவிடில் சாபதோஷமோ என ஸந்தேஹிக்கும்படி, (காண்டம் 7, பி, 3, ப, 30) என்னை துவேஷிக்கிறவனுடைய சரீரம் யக்ஞத்திற்கு உரிய தேவதைகள்

या: सरूपा, विरूपा, ऐकरूपा, यासामग्निरिषानामानि वेद ।
या अङ्गिरस:, तपसे हृचक्रुः........

ஆனுல் தற்பொழுது கொடூரமான வார்த்தைகளால் வழங்கப்படுகிறது சிரமப்பட தேவையே இல்லை. நல்ல நெல்லூர் பசுவாக வாங்கிவிட்டால் மிக சௌகரியம். தேவைப் படும்போதெல்லாம் சூடாக கறந்து உடனே.................... அமரகோசத்தில் இதற்கு பெயர் என்ன என்ருல் தெரியாது. ஏன்? அயல் தேசத்திலிருந்து சமீப காலத்தில் வந்ததால், அசுத்த மான வஸ்துவை உள்ளே புகவிட்டு எந்த கர்மா பண்ணினுல் தான் பலன் என்ன, கோவும் பிராம்மணனும் லோகத்திற்கு எல்லையற்ற உபகாரமானபடியால் தான் சிறிது தவறுதல் நேர்ந் தாலும் அது குற்றமாகப் பாவிக்கப்படுகிறது இல்லை, பிறருடைய பயிர்களையோ நெல்லையோ பசு மேய்ந்துவிட்டால் அதை ஓட்டவோ அல்லது ஓட்டச் சொல்லவோகூடாது. பாக்கியான மிருகங்களின் விஷயத்தில் அது செலுத்தப்படலாம்.

आक्रम्य ब्राह्मणै: भुक्तं, अनार्याणां च वेश्मनि ।
गोभिश्चपुण्यं तत्तेषांराजसूयात् विशिष्यते ॥

பிராம்மணனும் பசுவும் ஒருவித கர்மாவும் செய்யாதவன் வீட்டில் ஆக்ரமித்து உண்டாலோ அல்லது யக்ஞத்திற்கு தேவையான பொருளை எடுத்தாலோ அது அந்த பொருளின் சொந்தக்காரனுக்கு மஹா புண்யப்ரதமாகவும் ராஜசூயம் செய் தால் எவ்வளவு புண்யமோ அவ்வளவும் அவனுக்கு கிடைக்கிறது என்று பலனும் கூறப்படுகிறது. உதாரணமாக ஆதானம் என்ற கர்மாவில் 6 கோக்களை தக்ஷிணையாக விதிக்கப்பட்டு இருக்கிறது ஸோம யாகத்தில் 112 பசுக்களையும் இதர ஸ்மார்த்த கர்மாவில் எல்லோருக்கும் தெரிந்த விஷயம், ஆனுல் (प्रतिग्रहम्) வாங்குவர்களுடைய யோக்யதாம்சையை கவனிக்கு மிடத்து.

आहिताग्नि: सदा पात्रं अग्निहोत्री च वेदवित् ।
पात्राणामपि तत्पात्रम् शूद्रान्नम् यस्यनोदरे ॥

---

அற்றதும், தோள் முதலிய அங்கங்கள் பழுது ஆகுக (பிரயோஜனப் படாததாக)

निर्देवं निर्वीरं कृत्वाऽऽविष्कन्धं तस्मिन् हीयतां योऽस्मान् द्वेष्टि ।
शरीरं यज्ञशमलं कुसीदं तस्मिन् सीदतु सोऽस्मान् द्वेष्टि ॥

ஆஹிதாக்நி என்றால் ஏதோ ஒரு காலத்தில் அக்நிஹோத்ரம் செய்தவன் உயர்ந்தவன். அவனைவிட காலை மாலை விடாமல் ஹோமம் செய்பவனும், இன்னும் வேதத்தை ஓதி உணர்ந்தவனும், எவன் பால்யம் முதற்கொண்டு சதுர்தனுடைய அன்னம் (திரவியம்) சிறிதும் உதரத்தில் சேராமல் இருப்பவன் மிகமிக உயர்ந்தவன். எவன் 1 வருஷமாவது பயஸ்ஸால் (பாலால்) அக்நிஹோத்ரம் செய்வானோ அவனுடைய புண்யமானது கணக்கிட முடியாதது. அப்பேர்பட்டவர்களுக்கு கொடுக்கும் தானமானது சிறந்தது. அவன் தன்னையும் காப்பாற்றி கொடுத்தவர்களையும் கரை ஏற்ற சக்தி உண்டு. தன்னை காப்பது என்றால் தானம் வாங்குவது இளப்பம் அல்லவா அதனால் இவன் தபஸ் குறைந்து கறந்த பசுபோல ஆகிறான்.

प्रतिग्रहणो तेजो हि विप्राणाम् शाम्यतेऽनघ ॥

எந்த பொருளை பிடித்தாலும் உசிதப்படி (வேத மந்த்ரத்தோடு) வாங்குவதும் கொடுப்பதும் க்ஷேமகரம். மாறுதலாய் இருந்தால்,

हिरण्य, भू, गवाऽश्वाज, वस्त्र शय्यासनादिषु ।
यौऽर्चितः प्रतिगृह्णाति दद्यात् ह्यर्चितमेव च ।
तावुभौगच्छतस्स्वर्गम्, नरकञ्च विपर्यते ॥

நரகத்திற்கும் காரணமாகிவிடும் அப்படி கொடுப்பதும் கவனிக்க வேண்டும்.

दरिद्रायैव दातव्यम् न समृद्धाय पाण्डव ।
वर्षाणां हि तटाकेषु फलं नैव पयोधिषु ॥

குடும்ப பாரம் உள்ளவனையும் காப்பாற்ற சக்தி உள்ளவனையும் (அது விற்கப்படாது) இருப்பவனிடம் கொடுக்கவேண்டும். தனிகனாக இருப்பவனிடம் கொடுத்தால் ஸமுத்ரத்தில் மழை பெய்வதுபோல்தான். ஏரி தடாகம் இதுகளில் வர்ஷித்தால் வாய்க்கால்கள் மூலம் பாசனத்திற்கு உபயோகமாவதுபோல் கோவானது ஒருவருக்கே கொடுக்கவேண்டியது. பலபேர்களுக்கு கூடாது

---

கோக்களே எல்லாம் சேர்ந்து தங்களுக்கு கொம்பு முளைக்கவேண்டி ஸத்ரயாகம் செய்ததாம்.

गावो वा एतत् सत्रमासते सता श्रृङ्गास्सती श्रृङ्गाणि नो जायन्ता इति...
गो सत्रं वै

गौः एकस्यैव दातव्या न बहूनाम् युधिष्ठिर ।
सा गौः विक्रयमापन्ना, दहति आसप्तमं कुलम् ॥

அது விற்கப்பட்டால் இருவருடைய 7 தலைமுறையை பொசுக்கிவிடும். गौः, वस्त्रं, शयनं, स्त्रियः ஆக இந்த நான்கும் ஒரே தடவைதான் தானம். இது பெரும்பாலும் நிரக்ஷரகுக்ஷி யாய் இருப்பவருக்கே கொடுக்கப்படுகிறது. அச்ரோத்திரியர் களிடத்தில் கொடுத்தால் நான் என்ன பாபம் செய்தேனோ என்று தன்னை வருத்திக்கொள்கிறது तथा निन्दन्त्यथात्मानं अशुभं किंतु नः कृतम् । தேவதைகளுக்கு பிரகாசம் எப்படி லக்ஷணமோ அப்படியேதான் மனுஷ்யர்களும் मनुष्याः कर्मलक्षणाः கர்மா என்பது இவனோடு கூடப்பிறந்தது. न तत् त्याज्यं क्षणं हि तत् என்று கண்ணன் அருளிச் செய்கிறார். அக்னி என்பது ப்ரத்யக்ஷ தெய்வம் அது தளிகைக்கு உபயோகப்படும் வெறும் நெருப்புத் தானே என்று எண்ணக்கூடாது. வைச்வதேவம் நம் ஸூத்ர படிக்கு पचने आवसथ्ये वा என்பது ஔபாஸநாக்னியிலோ (பசனாக்னியில்) அடுப்பிலேயோ பகவானை சில இடத்தில் அஷ்ட மூர்த்தி எனப்படுகிறது. எட்டு சரீரம் உள்ளவர். பூமி, ஜலம், அக்னி, வாயு, ஆகாசம், சந்திரன், சூரியன் யாகதீக்ஷை செய்து கொண்டவர். ஆகையால்தான் வயதில் சிறியவராயினும் ஆஹிதாக்னி ஆஹிவிட்டால் சர்மாவை (பேரை) சொல்லி அழைக்கலாகாது.

न हायनैर्नपलितैः न वित्तेन न बन्धुभिः ।
ऋषयश्च क्रिरे धर्मं योऽनूचानः स नो महान् ॥

வர்ஷங்கள் ஆகியிருந்தாலும் தலை நரையினாலேயும் தநிகர் என்பதாலேயோ பந்துவர்கம் நிறைந்தவன் என்றோ அல்லது எடையில் 250 பவுண்டு இருக்கிறான் என்றோ பெரியவன் என்று மஹரிஷிகள் தர்மங்களை தொகுக்கவில்லை. நமக்குள் எவன் அனூசானனோ அவன்தான் மஹான். (பெரியவன்) நம் ஸூத்ர படிக்கு ஹவிர்யக்ஞம் பண்ணினவன் அனூசானன் என்றும் ஸோமயாகம் செய்தவன் ப்ரூணன்.

---

மிருகமானதால் அதன் அபிமானி தேவதையை குறித்து வ்யவ ஹரிக்கப்படுகிறது. அப்படியிருக்க செய்ய அதிகாரிகளாக இருப்ப வர்கள் செய்யாமல் இருந்தால் நம் ஆசார்யனுக்கு அநிஷ்டமல்லவா. இந்த அக்னிஹோத்ராதிகிரதுக்களோ நித்யம். இது எந்த காலத்திலே யும் தடுக்கப்படுகிறதே இல்லை.

क्षत्रियः शतवर्षी च दशवर्शी द्विजोत्तमः ।

पिता पुत्रौ च विज्ञेयौ तयोर्हि ब्राह्मणो गुरुः ॥

100 வயது க்ஷத்திரியனும் 10 வயது பிராம்மணனும் புத்ரனும் பிதாவும் போலத்தான். மேலும் वर्णानां ब्राह्मणो गुरुः என்று எல்லா வர்ணங்களுக்கும் குரு இவன்தான். க்ஷத்ரியாளில் பலவான் பெரியவன். வைச்யாளில் பணக்காரன் பெரியவன் (அதாவது சபையில் அக்ரபூஜைக்கு உரியவன்) அப்ராமணாளில் தான் வயதானவன் பெரியவன். எல்லாவற்றிற்கும் ஸம்ஸ்காரங் கள்தான் காரணம். மேலும் ஆடு மாடுகள் இன்னும் அநேக பிராணிகளும் கூடத்தான் பிரஸவிக்கிறதுகள். ஒரு பிராம்மணி கன்னிகை உத்தமலோகம் அடைய தவம் செய்தாள். அவளைப் பற்றி தேவலோகத்தில் ஒருவித ஸம்ஸ்காரங்களும் இல்லாத வளுக்கு எந்த லோகத்தை நிச்சயம் செய்யமுடியும் (முடியாது என்று பொருள்) ஸ்திரீகளுக்கு பதியின் சிச்ருஷை, கார்ஹ பத்யம் என்ற அக்னியை அநுகதமாகாமல் (அணையாமல்) காப் காப்பாற்றுவதும தவிர, மேற்கதி அடைய எவ்வித உபாயமும் கிடையாது. தீர்த்தாடனம், பகவத் ஸேவை இவைகளும் பர்த்தா உத்தரவு இல்லாமல் போவதும் பாபகரம். ஸ்திரீகளுக்கு விவாஹமானது உபநயனம் போன்றது. (நாரதர:)

अरंस्कृतायाः कन्याया; कुतोलोकस्तवऽनघे ।

एवं तु श्रुतमस्याभिः देवलोके महाव्रते ॥

உன் விஷயமாகப் பேச்சு வந்ததைக் கேட்டோம். ஒருவனுக்கு வாக்கில் ஸம்ஸ்க்ருதம் நன்ருக வரவில்லையென்ருல் இவனுடைய ஸம்ஸ்கார விஷயத்தில் தாய் தந்தையர்கள் அனுதரவாக இருந்தது தான் காரணம். மேலும் நல்ல திதியில் நல்ல லக்னத்தில் தீர்க்கா யுஸ்ஸோடும் அதிர்ஷ்டமுள்ளவனுகவும் சேரவேண்டும் என்று பகவானை ப்ரார்த்தித்தும் சமுத்ரயாத்ரை, நிமந்த்ரணம், வபநம் இவைகளில் அபநிவேசம் இல்லாமலும் இருந்தால் பிறந்த குழந்தையும் சரியாக நடப்பான். இவர்கள் சிரத்தைக் குறை வானல் யார் யாருக்கு என்ன ஸம்பந்தம் என்று கேட்கிருன்.

सामुद्रे भसास्वानं क्षौरं श्रद्धेषु भोजनम् ।

अन्तर्वत्वनी पतिः कुर्वन् न पुत्रफलमश्नुते ॥

---

धर्मो यत्र क्रिया चैषां नित्यं न प्रतिषिध्यते

ஸந்தியோ பாஸ்தி எந்த காரணத்தை கொண்டும் நிறுத்தப்படுகிறது. இல்லைபோல்தான் ஹோமங்களும், விதிவாக்யத்தை அதிக்ரமிக்காமல் கிடைத்ததை கொண்டு கடமை என்ற எண்ணத்தோடு செய்வது

புத்ரபலனை அடைகிறது இல்லை. ஆக ஸம்ஸ்காரம் அவசியம். இந்த பிராம்மண ஜன்மா அடைய ஜன்மாந்திரங்களில் எவ்வளவு பாடுபட்டு இருக்கவேண்டும், கதறி இருக்கவேண்டும் என்பது இதிஹாஸ புராணங்களின் மூலம் தெளிவாகும். பகவானும் இதுபற்றி विप्रत्वं दुर्लभं प्राप्य दुर्मार्गैः एवं आदिभिः இப்படி சுலபமாகக் கெடுத்துக்கொள்கிறார்களே तान्शोचामि என்று துக்கிக்கிறார். ஸ்ரீமத் ராமாயணத்திலும் மஹரிஷி விஸ்வாமித்ரர் பிராமண்யம் அடைய (க்ஷத்திரியர்) கஷ்டப் பட்டதைக் காணலாம். க்ஷத்ரிய சரீரத்தில் இருந்துகொண்டே பிராமண்யம் அடைந்தவர் இரண்டே பேர்தான். ஷி ரிஷியும், வீதஹவ்யனும். வீதஹவ்யன் என்னும் ராஜாசத்ருவால் துரத்தப்பட்டு மஹரிஷிகள் நிறைந்ததான ஆச்ரமத்தின் வாயிலில் நின்ற பிருகு மஹரிஷியைப் பிரார்த்தித்து அவரால் அபயப்ரதானம் பண்ணப்பட்டு ரிஷிகளின் மத்தியை அடைந்தான். சத்ருவும் துரத்திவர என் சத்ருவை வெளிப்படுத்தவேண்டுமென்று பிருகுவைப் பிரார்த்திக்கவும். அவர் இங்கு இருப்பவர்கள் எல்லோரும் பிராம்மணர்களே என்ற சுபமான வார்த்தையைக் கேட்டு இனி அவர் பூஜ்யர், சத்ருவே அல்லர். உங்களுடைய வாக்கின் வன்மையால் பிராம்மணராயும், மேலும் பிரும்ம ஞானியாகவும் ஆகிவிட்டார் அன்றோ.

भृगोर्वचनमात्रेण स च ब्रह्मर्षितांगतः ।
वीतहव्यो महाराज ब्रह्मवादित्व मेव च ॥

இந்த ஜன்மாவைக் கெடுத்துக்கொள்வது வெகுசுலபம். ஆனால், பிற்பட்டு பிறலாபம் (புலம்பல்) பிரயோஜனப்படாது. நன்றாகக் கவனிக்கவேண்டும். வேறு தேசம் போனவன் எப்படி முன் தேசத்தில் தன்னால் செய்யப்பட்ட நல்லதையோ கெட்டதையோ அறிவானோ அதேபோல்தான் வேறு தேஹம் எடுத்தவனும் (கெஞ்சினால் விடுவானா).

यथैव आत्मकृतं विद्युः देशांतर गतानराः ।
विद्युः तथैव अन्तकाले सुकृतं पौर्व दैहिकं ॥

பீஷ்மாச்சாரும் தர்மபுத்திரனைப் பார்த்து சொல்லுமிடத்து பிராம்மண்யம் அதிதுஷ்ப்ராப்யம் மிகமிக கஷ்டப்பட்டு கிடைக்கக் கூடியது.

---

தபஸ்தான். நன்றாக ருசி பார்த்து சாப்பிடுகிறவன் ஒன்றும் அகப் படாத சமயத்தில் கிடைத்தது போதும் என்று உபயோகிப்பதுபோல் தான். இதுபற்றி, ஒரு சமயம் காட்டு மார்க்கமாக சகோதரர் மூவர்

ब्राह्मण्यं अतिदुष्प्राप्यं वर्णै: क्षत्रादिभी: त्रिभि: ।
परं हि सर्वभूतानां स्थानमेतद्युधिष्ठिर ॥

அது சாமான்யமில்லே, அது எல்லாவற்றிற்கும் மேற்பட்ட ஸ்தானமப்பா. தர்மபுத்ரனே! எனக்கு ஜன்மா உண்டு என்ருல் ஹீநப்பிராம்மணுகவாவது பிறந்தால் அதிர்ஷ்டமுள்ளவனுக ஆவேன் என்று கண்களில் நீர்ததும்பச் சொல்கிருர். எல்லாரினும் உன்னிடம் எனக்குப் பிரியம். உன்னைக்காட்டிலும் எனக்கு பிரியமானவர்கள் பிராம்மணர்களே! பிராம்மணன் ஸ்த்ரிகுணுத் மகமான சரீரம் ஆனபோதிலும், பெரும்பாலும் ஸத்வ குணம் மேலிட்டு. மற்ற குணங்கள் அடங்கியிருப்பதால் விஷயங்கள் அவன் மனதில் நன்ருகப் பதியும். தனக்காக ஒன்றையும் தேட மாட்டான். நல்ல வேலைகளை சோம்பல் இல்லாமல் சரியாகச் செய்துமுடிக்க முடியும். ஆகையால்தால் லோகத்தின் க்ஷேமத் தைத் தேட பொறுப்பு பூராவும் இவனிடம் வைக்கப்பட்டு இருக் கிறது. உதாரணமாக தர்பத்தை அறுக்கும்பொழுது உன்னே இன்ன தேவதைக்காக என்றும் அறுத்த தர்ப்பையை சூரியன் கட்டாக சேர்த்து முடிவதும் இந்த்ரன் தன் கைகளால் தூக்கு வதும் ப்ருஹஸ்பதி தன் தலையில் ஏற்றிக்கொள்வதாயும் ஆக அந்த அந்த தேவதைகளாக தன்னைப் பாவித்தும், பகவதாராதன காலத்தில் தன்னே आत्मनि नारायण ध्यायन् புரோடாசம் பண்ண நெல்லே எடுக்கும்பொழுதும், குத்தும்பொழுதும் யூபத்திற்கு மரத்தை வெட்டும்போது அதனிடத்தில் கருணையை பாருங்கள்.

वनस्पते शतवलशो विरोहेत्या व्रश्चने जुहोति ।
तस्माद्‌ा व्रश्चना द्वृक्षाणां भूयां स उत्तिष्ठन्ति ॥

உன்னிடம் 100 போத்துக்கள் உண்டாகவேண்டுமென்று பிரார்த்தித்து ஹோமம் செய்வதும் ஸ்தாண் வாஹுதி ஸோமக் கொடியை நசுக்க எடுக்கும்போது இந்திரனுக்காக எடுக்கிறேன் என்று மனதார நினைத்து, இதுவும் தவிர (ஸ்வாமி தேசிகன் தயாசதகத்தில் வீணு விசேஷ மிவவேங்கட சைலநாத: என்று சாதித்து எனக்கு ஒன்றும் ஸ்வாதந்த்திரியம் கிடையாது ஏ! வீணையே கொஞ்சம் ராகம் ஆலாபனம் நடக்கட்டும் என்ருல்

---

யக்ஞம் உத்தேசித்து போனுர்கள். ஜ்யேஷ்டராகிய இருவர் காமத்தினுல் கவரப்பட்டு, ஞானத்திலோ வருமானத்திலோ தம்மை மிஞ்சினவனுக எண்ணி கடைசி தம்பியைக் கிணற்றில் தள்ளிவிட்டுச் சென்றுர்கள். சமதமாதி குணங்களையே வெகுமாளிக்கிரவரான மூன்றுமவர்

அது சப்திக்காது. அது அசேதனம். அதேபோல் தன்னை ஒரு கருவியாகக்கொண்டு ஷ்டி திவ்யஸூக்தியை பூர்த்திசெய்து கொண்டான் என்று எண்ண வேண்டியது) இந்த இரண்டு எண்ணங்களுடனும் ஒவ்வொரு வேலையை செய்வதினுலேயே நான் எனக்காக இருக்கிறேன். நான் ஸ்வதந்திரன் என்று இரண்டு தப்பு எண்ணங்களும் வரவர தேய்ந்துபோகும். நான் பகவானுக்காக இருக்கிறேன். நான் அவனுக்கு உட்பட்டவன் என்று தன்னுடைய ஸ்வரூபத்தை அறிவான். முன்பெல்லாம் ... ... ... ... ... வேதத்தில் கௌரவமுள்ளவர்களாய் இருந்ததால் பிராம்மணர்கள் வயிற்றுக்காகப் பாடுபடக்கூடாது என அவர்களுக்கு வேண்டிய உபகாரங்களைச்செய்து கொடுத்தார்கள் வேதத்தை அப்யாசம் செய்வது யாகம் முதலிய ஸத்கர்மாக்களுக்கு அனுகூலர்களாக இருந்ததால் தேசம் சுபிட்க்ஷமாக இருந்தது. பீஷ்மாசார் தருமபுத்ரருக்கு உபதேசிக்கும்போது गृहे चैषां अवेक्षेथाः किंस्वित् अस्तीतिजीवनं அக்னிஹோத்ரிகளான இவர்களுக்கு ஒருவித குறையும் இல்லாதபடிக்கு நீ வீடுகளில் போய் ஜீவனத்திற்கு என்ன இருக்கிறது என்பதைக் கவனி.

பிராம்மணனுக்கு தவம் அவசியம் தபஸ் என்ருல் காட்டிற்குப்போப் மூக்கைக் கெட்டியாகப் பிடிப்பது அல்ல. அவரவர்களின் (சாகையை) திரும்பத் திரும்ப சொல்வதேதான். तपों हि स्वध्यायं என்பது இதர காலங்களில் அஷ்டாக்ஷரத்தையோ, பகவானும் இதைப்பற்றி

ममसूक्तं जपेद्यस्तु नित्यं मद्गतमानसः ।
नसपापेन लिप्येतपद्म पत्रमिवांभसा ॥...............

எவன் என்னுடையதான (விஷ்ணு) ஸூக்தத்தை (விராமகாலங்களில்) ஜபிப்பானே அவனுடைய பாபமானது தாமரையிலையில் எப்படி ஜலம் சம்பந்தப்படாதோ அதேபோல் ஒட்டாது. विष्णोर्नुकं विर्याणि........उरुगायः பிராம்மணியானவள் தவம்செய்யும் புத்ரனையும், கோவானது பாரம் இழுக்கும் காளையையும் குதிரையானது ஓடும் தன்மையுள்ள குட்டியையும் பெறுகின்றது.

तपोर्धीयं ब्राह्मणीधत्तगर्भं गौर्वोढारं धावितारं तुरंगि ॥

---

கலங்காமல் வீணான மரணம் கூடாது என்று எண்ணி அங்கு சிதரிக் கிடக்கும் கற்களையும் மேலிருந்து தொங்குகிற கொடிகளையும் அம்பி குழவி ஸோமலதையாகவும் தியானம் பண்ணி எக்ஞம் ஆரம்பித்து விட்டார். வேதத்வனி யோவானைப் பிளந்துவிட்டது. ஆகாச வீதியில்

ஸ்ரீ:

இஷே த்வா ஹே பலாச சாகே உன்னை தேவர்களின் ஹவிர் பாகமாகிய தயிரின்பொருட்டு ஆச்சினத்மி வெட்டுகிறேன்.

इमां प्राची मुदीचीं इषमूर्जमभि संस्कृतां।

बहुपर्णाम शुष्काग्रां - हरामि पशुपामहम् ॥

பசுக்களை வனத்திற்கு ஓட்டிச்செல்ல புரசம் கொம்பு தயாரிக் கப்படுகிறது. மரத்தின் கிழக்கு அல்லது வடக்கே செல்வதும் நுனி உலராததும் நிறைந்த தழைகளோடு கூடியதும் (பசுவிற்குத் துன்பம் நேரிடாமல் இருக்க) அந்தக் குச்சியின் அடிப்பாகம் ஒட்டைச்சாண் அளவு நறுக்க உபவேஷம் என்பது (தணல்களை தள்ளுவதற்கு உபயோகம் – அந்தக்கொம்பால் ஓட்ட பசுக்கள் செல்லுமா என ஸந்தேஹம் வருவது ஸஹஜம். பசு என்பதற்கு ஸாது என்பதே பொருள். மாறுதலாக இருப்பதற்கு மூல காரணம் தர்மக்லானியே.

नवृषाः संप्रवर्तेरन् नमध्येरन् दधी निच।

घोषाः प्रणाशं गच्छयुः.........

அதர்மம் மேலிட வண்டி இழுக்கும் காளைகள் பாதையில் செல்லாது. அசேதனமான தயிர் சட்டிகூட வெண்ணை திரண்டு வரும் சமயம் ஆடி அசைந்து சிதர அடித்துவிடும்=எங்கும் அக்நிஹோத்ராதிக்ரதுக்களும் வேதத்வனியும் இருந்தால் காவியங்களில் வர்ணிக்கும்படி நித்ய வைரிகளான பசுவும் புலியும் உல்லாஸமாகத்திரியும்; மும்மாரி மழையும், உழாமலே ஸஸ்ய விருத்தியும், பசுக்கள் குடம்பால் கறக்கவும், ஸ்திரீபூமான்கள் அந்யோன்யம் ப்ரீதியும் கம்பீரமான தோற்றமும் ஆரோக்யமும் தர்மராஜா தன் சிஷ்யர்களோடும் துருப்பிடித்த ஆயுதத்தோடு ஏங்குவதும்.

कालेवा कारणं राज्ञः राजावा काल कारणम्।

इतिते संशयोमाभूत् राजा कालस्य कारणम् ॥

காலம் அரசனுக்கு காரணமோ அரசன் காலத்திற்கு காரணமோ என்ற சந்தேகம் உனக்கு வேண்டாம். அரசனே காலத்திற்குக் காரணம். ருக்மாங்கதன், அம்பரீஷன் இவர்களே உவமை. ராஜா என்ற இடத்தில் ஆஸ்திகர்களும் ஸ்ரீயாபி ஜுஷ்டர்களும் ஒவ்வொருவரும் ஆஹிதாக்னிகளை உண்டு பண்ணி அவர்களுக்கு கிஞ்சித்தேனும் கவலை இல்லாமல் இருக்க

उभाहिं हस्ता वसुना पृणस्वा आप्रयच्छ दक्षिणा दोतसव्यात्।

என்றபடி இரு கைகளாலேயும் வாரிவழங்கினல் க்ருதயுகமாகமாரி மேற்சொன்ன புரசன் கொம்பே போதும் பசுவை செலுத்த.

இதற்கு மாறுதலாக இருப்பவர்கள் யார்யாரோ ப்ராணாய ம்ய யத்காலம் யோமாம் சாபி சிந்தயேத் தத்கா லோவை துவி ஜோஞேய; சேஷகாலோஹி அத இதர:

குடும்பத்தில் சில விட்டகாலம் போக பாக்கி காலங்களில் பகவத்யானம் அவசியம் (விருதாஜல்பம் கூடாது. சேஷ காலோஹி அவன் இதரன் என்று இடித்து பேசுகிருர். பெற்ற தாயார்கள் நினைப்பார்களாம். ஏதாவது ஒரு விஷயத்திலாவது பெற்ற மகன் சூரனுக இல்லாவிட்டால் உச்சாரஏவஸ: என்று ஏதோ சுமை நீங்கிற்று என்று தன்னைக் குறைவுபடுத்திக் கொள்வார்களாம்.

दाने तपसी शौर्येवा, यस्यनप्रथितं यशः ।
विद्यायां अर्थलाभेवा मातुः उच्चारयेवसः ॥

முன் சொன்ன 4 வது பாதம், என் மகன் தானத்தில் சூரன்; தபஸ்ஸில் சூரன்; வித்தையிலோ புகழ் கிளம்பனும் என்பதாக எக்ஞ்ஜத்தின் பெருமையும் பிராம்மணனின் பெருமை யும் திரும்ப திரும்பச் சொல்வானேன் என்று கேட்கலாம். அப்படி அல்ல. தர்மம் என்பது மேட்டுமடை. அதற்கு அடைத்து ஏற்றித்தான் பாய்ச்சவேணும். நாம் எவ்வளவு திரும்பச் சொன்னலும் வெகு சுலபமாக இதரர்கள் கலைத்து விடுவார்கள். அக்நி ஹோத்ரத்தையோ யாகங்களையோ எவர்கள் பேதப்படுத்தி தடுக்கிருர்களோ அவர்களுக்கு வெகு சீக்ரத்தில் சிரமம் ஏற்படத்தான் அப்பேர்பட்ட புத்தி. கோலை எடுத்துக் கொண்டு மாடுகள் பயிர்களில் மேயாதபடி இடையர்கள் காப்பது போல் தேவதைகள் மனுஷ்யர்களைக் காப்பது இல்லை. नदेवायष्टि मादाय रक्षन्तिपशुपालवत् என்றும், குறைவு ஏற்படவேண்டும் என்பவர்களுக்கு बुद्धिं तस्यापकर्षन्ति सः अवाचीनामि पश्यति புத்தியை எடுத்துவிட்டால் கீழ்தரமான கார்யங்களில் பிரவேசிக்கிருன். அதாவது தர்மத்திற்கு மாருக. அதற்கு தகுந்த பலன்தான் பலன்தான் வேறுபடுமோ.

बालो युवावा वृद्धश्च यत्करोति शुभाशुभम् ।
तस्यां तस्यां अवस्थायां भुंते जन्मनि जन्मनि ॥

---

ஸகல தேவர்களும் ஹவிர்பாகம் பெற வரவும், இப்படியாக அவபிருத மும் நிறைவேறியது. இந்த த்ரிதர் என்ன மற்றும் மஹான்களுக்கு தவத்தால் அடையக் கூடாதது மூவுலகிலும் இல்லை.

ना प्राप्यं तपसः किंचित् त्रैलोक्येऽपि परंतप

பால்யத்திலோ, யுவாவாய் இருக்கும்போதோ, வார்த்திக்யத்திலோ நல்லதோ கெட்டதோ எது செய்யப்பட்டதோ அந்த அந்த அவஸ்தையில் ஒன்றுக்கு நூருக அனுபவிக்கிருன் (நூறு என்ருல் அநேகம்) शतं ससस्रं अयुत्रं सर्वं अक्षय्य वाचकं ஒருவனும் ஏவாமல் இருந்தபோதிலும் அந்த அந்த ருதுக்களில் பூவும் பிஞ்சும் கனிகளும் நாம் காண்பதுபோல் துளிகூட மாருமல் வந்து அடையவே செய்யும். இது கர்மபூமி அல்லவா. சுகிருதம் துஷ்கிருதம் என்ற விதைக்கு சோடை கிடையாது,. (சோடை என்பது அவரை துவரைதான்) கண்டிப்பாக பலனை கொடுத்தே ஆகும். ஒருவன் வாஸ்தவமாக, கூர்மையாக, இது கர்மபூமி என்று கவனித்து பார்த்தானே ஆகில் தவறு செய்ய, பாபம் செய்ய முற்படுவானு அல்லது ஸஹவாஸதோஷத்தால் செய்தாலும் பிற்பட்டு மனமும் தவிக்கும். குறைத்துக்கொள்ளவே முற்படுவான். ஆக கிரதுக்கள் அவசியம் அதன் பெருமையை கவனிக்குமிடத்து நித்யம் என்றும் அதாவது மூச்சு உள்ளவரை செய்தே தீரவேண்டும். செய்யாவிடில் ப்ரத்யவாயம் சொல்லப்படுகிறது. ஸ்வதர்மத்தை நிலைநிறுத்தவே கீதை பிறந்தது. ஸ்வதர்மமானது குணமில்லாமல் இருந்தாலும் நன்ருக அனுஷ்டிக்கப்பட்ட பரதர்மத்தைக் காட்டிலும் சிறந்தது. அப்பேர்ப்பட்ட அக்னி ஹோத்ராதி யாகங்கள், நம் விகநஸாசார்யாரும், நம் கிரஹ்ய சூத்ரத்தில் சொல்லியிருக்கிருர். வேறு மஹரிஷிகள் சொன்னதை நாம் செய்யவில்லை. நம் ஆசார்யன் விதித்ததற்கு என்ன ஆக்ஷேபம் சொல்லமுடியும்? இதற்குமுன் இருந்த மஹநீயர்களும் செய்தும் இருக்கிருர்கள். இதர சூத்ரங்களை காட்டிலும் நம் சூத்திரத்திற்கு பலவாருக ஏற்றம் இருப்பது பற்றி அடியேனிடம் ஸ்ரீ வெ. அக்னி ஹோத்ரம் ராமானுஜ தாத்தாச்சார்யஸ்வாமி சொல்வது உண்டு.

अथाग्नौनित्यहोमान्ते विष्णोर्नित्यार्चा सर्वदेवार्चा भवति ।

..............................होमान्ते अर्चयति ॥

..................भगवन्तं श्रीमन्नारायणं अर्चयेत् ।

ஹோமம் என்ற பதம் ராமாயண பாரத பாகவத்திலோ வந்தால் அது நித்யமான அக்னி ஹோத்ரமே இது ஸம்சயமற்ற விஷயம். கிருஹத்தில் செய்யவேண்டிய அக்னிஹோத்ரத்தை

---

முன் காலத்தில் பிரும்மதேவரும் மற்ற தேவர்களும் ரிஷிக் கூட்டங்களும் இவ்வுலகில் செய்த யாகத்தாலும் தவத்தாலும் பரிசுத்தி பெற்று பிரும்மலோகத்தை அடைந்து இருக்கிருர்கள். (ஆக நம் போன்ற ஜீவகோடிகளிலிருந்துதான் ஸகலரும் வணங்கும்படியான ஆதிபத்யங்களும்)

செய்து முடித்துக்கொண்டுதான் வீட்டில் ஆகாதனமோ அல்லது தேவாலயத்திலோ ஆராதனம் தொடங்க வேண்டியது. அப்படி செய்யும் நித்யகர்மாவில் (அக்நி ஹோத்ரத்தில் பிரயோகத்தில்) ந்யூநாதிரக்த ஏற்பட்டால் குறைவு அதிகம் விஷ்ணு பூஜையினலேயே ஸம்பூர்ணமாகிவிடுகிறது என்று எள்ளளவு கூட சந்தேகமில்லாமல் ஸூத்ரவாக்யம் மேலும், பூர்வர்கள் பிரதி வருஷமும் வஸந்தரிதுவில் அக்நிஷ்டோமம் செய்து வஸந்த யாஜி என பட்டம் பெற்ற ஸ்ரீநிவாஸ தீக்ஷிதரும், சுமார் 2500 வருஷங்களுக்கு முன்பு நரஸிம்ஹ வாஜபேய யாஜி இவர்களாலும் அனுஷ்டிக்கப்பட்டு இருக்கிறது சுமார் 300 வருஷங்களுக்கு முன்பு கும்பகோணம் தாலுக்கா வேப்பத்தூர் + பாகவதபுரம் என்ற ஊருக்கு இடையில் உன்னதபுரம் என்ற சிறு கிராமம் இருந்ததாகவும், (தற்பொழுது ஒரு லிங்கம் அதைச் சுற்றி தடல்) அதில் நம்மவர் கிருஷ்ண யஜ்வாஸோமயாகம் செய்து தன் கையாலேயே ஸோம ப்ரயோக க்லுப்தி என்ற ஓலை சுவடியையும் எழுதி காலகதி அடைந்தார். அவருக்கு ஸந்ததி இல்லாத காரணத்தாலோ அல்லது வேறு காரணத்தாலோ அதை நன்கு காப்பவர் இல்லாமல் சிதிலமாக இருப்பதுகண்டு கோதாவரி சமீபம் ஒருவர் இதை தன் ஊருக்கு எடுத்துப்போய் தெலுங்கில் மொழிபெயர்த்திருந்தமையால் அடியேனுக்கு திருப்பதி மஹான் ஆகுலமன்னுடு ஸ்வாமி பரமகிருபையோடு வாங்கி உடனடியாக வேண்டிய ஸப்ஜெட் ஆதானம்; பாவமானேஷ்டி, அக்நி ஹோத்ரம், பிரகிருதி இஷ்டி, மந்திரபாகங்களை கிரந்த லிபியில் மொழிபெயர்த்து உதவியபடியால் இன்றுவரை நடைபெற்று வருகிறது நம் சமூகத்தில் ஒரு பெரியவரை இதுபற்றி கேட்டேன். அவர் இதெல்லாம் நமக்குத் தேவையில்லை ஸ்ரீமத் ராமாயணத்தைப் படி போதும் என்றார். அவர் பெரியவராயிற்றே என்று தாழ்ந்த குரலில் நம் ஆசார்யன் விதித்தாயிற்றே நித்யம் என்றும் ஸம்ஸ்காரங்கள் அவசியமில்லையா என்றேன். 40வது ஸம்ஸ்காரமாவது ஆபஸ்தம்பர் போதாயனர் இவாள் சொல்லியதுபோல் நம் ஆசார்யனும் சொன்னரே தவிர ஏதும் இல்லை என்றார். இப்படியெல்லாம் சொன்னல் எந்த வைதீக கர்மா நடக்கும். மேலும், நம் ஸூத்ரம் பிற்பட்டு ஏற்பட்டது என்ற சொல்லுக்கு இடமாகும்.

---

इहं प्रजापतिः पूर्वं देवाः सर्षिगणास्तथा ।
इष्टेन तपसा पूताः ब्रह्मलोकमुपाश्रिताः ॥

ஆக அக்நி இல்லாமல் ஒரு கார்யமும் நடவாது. பஞ்ச பஞ்ச உஷத் காலத்தில் இருந்துதான் ஆன்ஹிகங்கள் ஆரம்பமாகின்றன.

இதுவரை நம் ஸூத்ரம் ஆதி என்றும் சுத்த வைதீகம் என்றும் (வேதத்தையே தழுவியது) என்று வாதாடுவது அர்த்தமற்றதாகிவிடும். நம் மதிப்பை நாமே குறைத்துக் கொள்வதுபோல் ஆகும். இதரர்கள் தற்பொழுது நம் சமூகத்தைப்பற்றி ஏதோ குறைவாகப் பேசியும் பத்திரிகைமூலம் வெளியிடுவதாகவும் கேள்வி. போதாக்குறைக்கு ப்ரத்யக்ஷ பசுவில் மூலைக்கு ஒருவராக ஆக்ஷேபங்கள். இதற்கு நம் ஸூத்ரத்திலேயே ஆதாரம் என வேறு சுட்டிக் காட்டுகிறார்கள் என்ன விபரீதம்?

सर्वं संक्षिप्स्य से लोके नरैः पण्डितमानिभिः

இந்த கலியில் பெரும்பாலும் பண்டிதன் எனப் பெயர் பூண்டு சகலத்தையும் குறைப்பதே நோக்கத்தோடு இருப்பார்கள் என்பது நன்கு தர்மத்தை அனுஷ்டித்தால் சூரனாயும் தீர்க்காயுள் உள்ளவனாயும் பண்டிதனாகவும் ஆரோக்யத்தோடும் பகவானுக்கு பிரியனாகவும் ஆகலாம்.

ஸ்ரீ:

உலகில் சந்தோஷத்திற்குக் காரணங்களான அநேகங்களில் மிக உயர்ந்தது கைநஷ்டமான பொருள் திரும்பக் கிடைப்பதே. வேதமும் அஷ். 1, பிர. 3, பஞ். 6. அவன் தன் வசமின்றி மிக உச்சஸ்வரத்தில் சப்தம்போடுவான். இதை ஒட்டியே ஸ்ரீமத் ராமாயணத்திலும் பாலகாண்டம் தசரதர் விஸ்வாமித்ரரை எதிர்கொண்டு அழைக்கும் சமயம் சிலாகித்து பேசுகையில் தங்கள் வரவானது ......प्रणष्टस्य यथा लाभो...... तथैवागमनं मन्ये

அப்படி நம் ஸமூஹத்தில் வெகுநாட்களாக மறைந்து இருந்த ச்ரௌத தர்மமானது ஸ்ரீ உ. வெ. திருக்குடந்தை அக்நிஹோத்ரம் ராமானுஜ தாத்தாச்சார்ய ஸ்வாமியின் மிக்க பிரயாசையினால் திரும்பக்கிடைத்து இன்றுவரை நடந்துவருவது பற்றி நம் ஸமூஹம் பூராவும் வேதமே மூர்த்திகரித்து இருக்கிற ஷி ஸ்வாமிக்கு கிருதஞ்ஞதையை செலுத்தி மங்களத்தை அடைவோமாக. அவாள் செய்த ச்ரௌத, தர்ம அங்குரார்பணமானது இனி விருக்ஷமாகி ஓங்கி பூவும், காயும், கனிகளுமாக ஆகி நமக்கு பரமக்ஷேமத்தைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

சுபம். உ. கி. வ. யஜ்வா.

இதற்கு எதிரிடையாக இருந்தால் பலனும் வேறுதான்.

ये च दीर्घायुषश्शूराः पण्डिताः भोगिनस्तथा ।

नीरोगाः रूपसंपन्नाः तैः धर्मः सुकृतःपुरा ॥

பிற்பட்டு தெய்வங்களை நொந்துகொள்வதில் பிரயோஜனமில்லை. அடுத்த வீட்டுக்காரனைப்பற்றி (7 மாடி என்று) அஸூயைப் படுவதும் தேவதைகளை குறைத்துப் பேசுவதும் கூடாது. दैवतान्यपि मान्य हि पुरुषेण विशेषतः தேவதைகளை பெருமைப் படுத்தவேண்டும். பாழும் தெய்வமே எனச் சொல்வது கூடாது. அது தன் குற்றத்தினுல் வந்தது என அறிகிறது இல்லை. (ஆதாரத்தோடுதான் சொல்கிறேன்.)

स तदात्मापराधेन संप्राप्तो व्यसनं महत् ।

सेन्द्रान् गर्हयते देवात् नात्मानञ्च कथञ्चन ॥

மஹத்தான வியஸனமானது தன்னுடைய அசுபமான முன் கர்மாவினுல்தான். மேலும்,

यथामृत्पिण्डतः कर्ता कुरुते यद्यदिच्छति ।

एवं आत्मकृतं कर्म मानवः प्रतिपद्यते ॥

அவன் அவன் விரும்பி செய்துகொண்ட கர்மாவே! குலாலன் தன் யோக க்ஷேமத்தை உத்தேசித்து வீட்டிற்கு உபயோகமானவைகளைப் போட்டு விற்று நல்ல வழியில் பணம் சம்பாதிக்கிருன். மற்றொருவன் உடைப்பதற்கே என தெரிந்தும் தெய்வ பிம்பங்களை செய்து சுட்டு விற்று கடைத் தெருவில் நடமாட முடியாதபடி அவ்வளவு பாபத்திற்கும் மூலகாரணமாக

एवं च तूर्णं वर्णानां आश्रमाणां च पार्थिव ।

विपरीतं वर्तमानाः म्लेछाजायन्ति अबुद्धयः........॥

வர்ணங்களுக்கும் ஆச்ரமங்களுக்கும் விரோதமாக இருந்து கொண்டு கர்மாக்களை செய்பவர்கள் மிலேச்சர்களாக பிறந்து பிற்பட்டு நரகங்களை அனுபவித்து சாச்வதமாய் திர்யக்யோனி களில் விழுகிருர்கள். இப்படிக்கெல்லாம் மாறுதலாக செய்தால்

---

படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போதே அவரைத்தான் உபாஸிக்க வேண்டியிருக்கிறது.

सायं प्रातर्मनुष्याणां अशनं वेद निर्मितम् । என்று இரண்டு வேளை தவிர இடையில் ஆஹாரம் சொல்லப்படவில்லை.

